INTERNATIONAL INDIAN SCHOOL, DAMMAM
CBSE Affiliation No. 5730002 - School No. 90056
P.O. Box 3320, Al Khobar-31952, Kingdom of Saudi Arabia

# SCHOOL ACADEMIC RESOURCE

| | |
|---|---|
| **ACADEMIC YEAR & TERM** | 2026-27 TERM I |
| **CLASS** | VII |
| **SUBJECT** | TAMIL |
| **TOPIC/CHAPTER** | MIDTERM WORKSHEET |
| **SECTION [KG/MIDDLE/SECONDARY ETC.]** | MIDDLE |
| **DATE OF ISSUE** | SEPTEMBER 2026 |

# தமிழ்

## I. கீழ்க்காணும் பத்தியைப் படித்து, உணர்ந்து, கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்க.

முற்காலத்தில் தமிழகத்தில் காடுகளும் மரம், செடி, கொடிகளும் நிறைந்திருந்தன. மனிதர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். விலங்குகளையும் பறவைகளையும் தங்களின் உடன்பிறவாச் சகோதரர்களாகக் கருதினர். காடுகளைப் பாதுகாப்பது தங்களின் முதன்மையான கடமை என எண்ணினர். மரங்களை வெட்டுவதைச் பெரும் பாவமாகக் கருதினர். மரம் வளர்ப்பதை ஒரு புண்ணியச் செயலாகப் போற்றினர். ஒரு மரத்தை வெட்டினால், அதற்குப் பதிலாகப் பத்து மரக்கன்றுகளை நட்டு வளர்க்கும் வழக்கம் அன்றைய மக்களிடம் இருந்தது. காடுகள் நமக்கு மழையைத் தருகின்றன. தூய்மையான காற்றை வழங்குகின்றன. மண்ணரிப்பைத் தடுக்கின்றன. எனவே, இயற்கையின் கொடையான காடுகளை நாமும் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

### வினாக்கள்

1. முற்காலத்தில் தமிழகம் எவ்வாறு காட்சி அளித்தது?
2. அன்றைய மனிதர்கள் விலங்குகளையும் பறவைகளையும் எவ்வாறு கருதினர்?
3. மரங்களை வெட்டுவதை மக்கள் என்னவாக நினைத்தனர்?
4. ஒரு மரத்தை வெட்டினால் மக்கள் என்ன செய்தனர்?
5. காடுகளால் நமக்குக் கிடைக்கும் பயன்கள் யாவை?

# <u>இலக்கணம்</u>

## I. சான்று தருக.

1. அண்மைச்சுட்டு - __________________.
2. சுட்டுத்திரிபு - __________________.

3. நேரிணைச்சொல் - ________________.
4. இனமில்லா அடைமொழி - ________________.
5. புறவினா - ________________
6. இன எழுத்து அமைந்த சொல் - ________________
7. எதிரிணைச்சொல் - ________________
8. சேய்மைச்சுட்டு - ________________

## II. நிரப்புக.

1. தற்போது வழக்கில் இல்லாத சுட்டு எழுத்து ________________.
2. சொல்லின் முதலில் வரும் வினா எழுத்துகள் ________________.
3. அடைமொழி ________________ வகைப்படும்.
4. இன எழுத்து வரும் ஒரு சொல் ________________.
5. சொல்லின் இறுதியில் வரும் வினா எழுத்துகள் ________________.
6. சொல்லுக்கு உள்ளேயே நின்று வினாப்பொருளை காட்டுவது ______________.
7. ஒரே பொருள் தரும் இரு சொற்களைப் பயன்படுத்துவது ________________. இணைச்சொல்லாகும்.
8. சொல்லின் முதலிலும் இறுதியிலும் வந்து வினாப் பொருளை உணர்த்தும் எழுத்து _________.

## III. கூறியவாறு செய்க.

1. மயில் (சேய்மைச்சுட்டில் எழுது) ________________
2. எம்மனிதன்? (எவ்வகை வினா?) ________________
3. சிங்கம் (இன எழுத்துகளை எடுத்து எழுது) ________________
4. இவன் (சுட்டெழுத்தை எடுத்து எழுதுக) ____________________
5. பாற்குடம் (எவ்வகை அடைமொழி?) ________________
6. 921 (எண்பெயர் எழுது) ________________
7. நண்பனா? (வினா எழுத்தை எடுத்து எழுதுக) ________________
8. தன்னந்தனியே (இணைச்சொல்லின் வகையை எழுதுக) ________________
9. 6357 (எண்பெயர் எழுது) ________________

## IV. இலக்கணக்குறிப்பு தருக.

1. அவ்வீடு - ________________
2. கண்ணுங்கருத்துமாக - ________________
3. யாவர்? - ________________
4. அந்த மனிதர் - ________________
5. பாற்குடம் - ________________
6. இவர் - ________________
7. தென்றல் - ________________
8. பூமரம் - ________________
9. கருங்குயில் - ________________
10. அப்பெண் - ________________

## V. சரியான வாக்கியம் எது?

1. அ) சீரும் சிறப்பும் - நேரிணைச்சொல்.

   ஆ) சீரும் சிறப்பும் - எதிரிணைச்சொல்.

   இ) சீரும் சிறப்பும் - செறிவிணைச்சொல்.

2. அ) சொல்லின் முதலில் வரும் வினா எழுத்துக்கள் - எ,ஏ,ஓ.

   ஆ) சொல்லின் முதலில் வரும் வினா எழுத்துக்கள் - ஆ,ஓ,யா.

   இ) சொல்லின் முதலில் வரும் வினா எழுத்துக்கள் - எ,ஏ,யா.

3. அ) அது, இது, உது என்பது அகச்சுட்டு ஆகும்.

   ஆ) அது, இது, உது என்பது அண்மை சுட்டு ஆகும்.

   இ) அது, இது, உது என்பது புறச்சுட்டு ஆகும்.

# தமிழின் இனிமை - <u>செய்யுட்பகுதி</u>

## I. பொருள் எழுதுக.

1. நனி - ________________
2. முற்றல் - ________________
3. கழை - ________________

4. நல்கிய - ________________

**II. பிரித்தெழுதுக.**

1. என்னுயிர் - ________________
2. குளிரிளநீர் - ________________
3. கனியிடை - ________________

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. தமிழின் இனிமைப் பாடல் இடம்பெற்றுள்ள நூல் ____________
2. கனக சுப்புரத்தினம் என்ற இயற்பெயர் கொண்டவர் ______________
3. பாரதிதாசன் பிறந்த ஊர் ______________

**IV. விடையளி**

1. தமிழின் இனிமைப் பாடலின் ஆசிரியர் யார்? அவர் எதனை தன்னுயிர் என்கிறார்?
2. பாரதிதாசன் எவற்றையெல்லாம் இனியன என்று கூறுகிறார்?

**V. அடிமாறாமல் எழுதுக.**

1. **"கனியிடை"** எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

## திருக்குறள்

**I. பொருள் எழுதுக** :-

1. ஆன்ற - ________________
2. நயன் - ________________
3. புக்கு - ________________
4. மாய்வது - ________________
5. அரம் - ________________
6. நன்பால் - ________________

**II. பிரித்தெழுதுக** :-

1. பெருஞ்செல்வம் - ________________
2. பண்புடைமை - ________________
3. அதுவின்றேல் - ________________

4. இவ்விரண்டும் - ________________

5. மக்கட்பண்பு - ________________

**III. நிரப்புக:-**

1. உலகப்பொதுமறை எனப் போற்றப்படுவது ______________
2. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று ______________

**IV. விடையளி :-**

1. பண்புடையவராக வாழ்வதற்குரிய நல்ல செயல்கள் யாவை ?
2. 'மரம் போன்றவர்' யார் ?
3. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எவ்வாறு பயனிலாது போகும் ?

**V. அடிமாறாமல் எழுதுக.**

1. **"நயனொடு"** எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.
2. **"அரம்போலும்"** எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.
3. **"திரிந்தற்று"** எனத் முடியும் குறட்பாவை எழுதுக.

## மூதுரை

**I. பொருள் எழுதுக :-**

1. அடக்கம் - ________________

2. கடக்க - ________________

3. எண்ணுதல் - ________________

**II. பிரித்தெழுதுக :-**

1. என்றெண்ணி - ________________

**III. சேர்த்து எழுதுக :-**

1. வரும் + அளவும் - ________________

**IV. நிரப்புக:-**

1. மூதுரை நூலின் ஆசிரியர் ____________.

2. மடையில் பாய்கின்ற நீரில் ஓடுகின்றவை ____________.

## V. பொருத்துக :-

1. உறுமீன் - நீர் பாயும் வழி
2. கருதவும் - பணிவு
3. அறிவிலர் - நினைக்கவும்
4. மடைத்தலை - பெரிய மீன்
5. அடக்கம் - அறிவு இல்லாதவர்

## VI. வினாக்கள் :-

1. கொக்கு எதற்காகக் காத்திருக்கிறது ?
2. அடக்கமாக இருப்பவரை அறிவில்லாதவர் என்று எண்ணி வெல்ல நினைக்கக் கூடாது. ஏன்?

VII. **அடக்கம் உடையார்** என தொடங்கும் மூதுரை பாடலை எழுதுக

# கல்விச் செல்வமும் பொருட்செல்வமும் (உரைநடை)

## I. பொருள் எழுதுக.

1. இம்மை - ________________

## II. சேர்த்து எழுதுக :-

1. பொருள் + செல்வம் - ________________
2. பொருள் + இல்லார்க்கு - ________________
3. பழமை + மொழி - ________________
4. நன்மை + வழி - ________________

## III. பிரித்து எழுதுக :-

1. பணமென்றால் - ________________
2. தொலைக்காட்சி - ________________
3. காரணமாகின்றது - ________________

## IV. எதிர்ச்சொல் எழுதுக.

1. வறுமை x ________________
2. வருத்தம் x ________________

## V. நிரப்புக:-

1. பசி வந்திட _________ போகும்.
2. கேடில் விழுச்செல்வம் _________
3. பொருளால் நம் வாழ்வு _________ பெறும்.

## VII. வினாக்கள் :-

1. கல்விச்செல்வமே மிகவும் சிறந்த செல்வம் என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்கள் யாவை?
2. பொருட்செல்வமே மிகவும் அவசியம் என்பதற்குத் தமிழரசி கூறிய காரணங்களைத் தொகுத்து எழுதுக.

# தமிழர்களின் வீரக்கலைகள் (உரைநடை)

## I. சேர்த்து எழுதுக :-

1. சிலம்பு + ஆட்டம் - _______________
2. வீரம் + கலை - _______________
3. மல் + போர் - _______________
4. தன் + காப்பு - _______________

## II. பிரித்தெழுதுக :-

1. தனக்கென்று - _______________
2. கொடைத்திறம் - _______________
3. வீரக்கலை - _______________

## III. நிரப்புக :-

1. 'மஞ்சு விரட்டு' என்பதைக் குறிக்கும் விளையாட்டு _________
2. ஒலிம்பிக் போட்டியில் சேர்க்கப்பட்டுள்ள கலை ___________
3. தமிழரின் வீர விளையாட்டாகக் கருதப்படாதது ___________.

## IV. எதிர்ச்சொல் எழுதுக :-

1. இன்பம் x ________________
2. வாழ்தல் x ________________
3. நிறைந்த x ________________

## V. பொருத்துக :-

1. காளை - முயற்சி
2. சிலம்பம் - உழவு
3. சிறுவாரைக்கம்பு - திமில்
4. தாளாண்மை - மூங்கில்
5. வேளாண்மை - கம்பு

## VI. விடையளி :-

1. தமிழர்களின் வீரக்கலைகள் சில கூறுக.
2. ஏறுதழுவுதல் என்றால் என்ன ?
3. சிலம்பாட்டம் - பெயர்க்காரணம் தருக.
4. மற்போர் எவ்வாறு நடைபெறுகிறது ?

# எழுதுதல்

## I. கடிதம் எழுதுக.

1. விடுதியில் தங்கியிருக்கும் நீ, கல்விச் சுற்றுலா செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்குக் கடிதம் எழுதுக.

2. குடிநீர் வசதி அமைத்துத் தருமாறு பஞ்சாயத்துத் தலைவருக்குக் கடிதம் எழுதுக.

## II. கட்டுரை எழுதுக.

1. **தொலைக்காட்சியின் நன்மை தீமைகள்** - முன்னுரை - தொலைக்காட்சியின் பயன்கள் - தீமைகள் - முடிவுரை
2. **"வறுமையிலும் நேர்மை"** என்னும் தலைப்பில் அமைந்த **துணைப்பாடப்பகுதியை** எழுதுக.

**NOTE: REFER TO TEXTBOOK AND ALL NOTES & WORKSHEETS OF TERM 1 DISCUSSED AND UPLOADED IN GOOGLE CLASSROOM**